# உரிமம் வழங்குதல், அனைவருக்கும் பாதுகாப்பான வாடகை வீடுகள் உருவாக்குதல்




## வசிப்பிடம் வாடகைக்கு விடுவதற்காக உரிமம் அளித்தல் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள்...

ஒரு குடியிருப்புவாசியாக, கட்டிட சொந்தக்காரராக, மற்றும் வாடகைக்கு இருப்பவராக இருக்கும் உங்களுக்கான பொறுப்புக்களை புரிந்துகொள்வது என்பது, நமது நகரில் வாழ்க்கைத்தரத்தைப் பேணி வர உதவுகிறது.

**வசிப்பிடம் வாடகைக்கு விடுவதற்காக உரிமம் அளித்தல் பற்றிய ஆரம்ப திட்டம்**

பிராம்ப்டன் நகர சபையானது, 28 மார்ச் 2024 அன்று, வசிப்பிடம் வாடகைக்கு விடுவதற்கான உரிமம் அளித்தலுக்கான (RRL) ஆரம்ப திட்டத்தில் மாற்றங்களுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது; இது வாடகைக்கு விடும் கட்டிடங்களின் தரங்களை மேம்படுத்துவதுடன், குடியிருப்பவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வினையும் உறுதிசெய்வதை இலக்காகக் கொண்டுள்ளது. ஆரம்பத்தில், இரண்டு வருடகால முன்னோடித் திட்டம் பிராம்ப்டனில் உள்ள ஐந்து (5) 'மத்திய' வார்டுகளில் கவனம் செலுத்துகிறது; அங்கு பெரும்பாலான விதிமீறல்கள் வரலாற்று ரீதியாக நிகழ்ந்துள்ளன. திட்டத்தின் எதிர்காலத்திற்கான தகவலறிந்த முடிவுகளை எடுக்க அடுத்த இரண்டு ஆண்டுகளில் ஆரம்பத் திட்டம் மதிப்பாய்வு செய்யப்படும்.




Tamil

BRAMPTON

**யாரெல்லாம் வசிப்பிடம் வாடகைக்கு விடுவதற்காக உரிமம் பெறவேண்டும்?**

- **இரண்டு ஆண்டுக்கால ஆரம்பத் திட்டத்தின்போது 1, 3, 4, 5 மற்றும் 7 ஆகிய வார்டுகளில் இருக்கும் வாடகைக்கு விடும் கட்டிடங்கள்**
- நான்கு (4) அல்லது குறைவான அலகுகளை வாடகைக்கு விடும் கட்டிடங்கள்
- வாடகைக்கு விடும் கட்டிடங்களின் உரிமையாளர்கள்
- வாடகைக்கு விடும் கட்டிடங்களை இயக்குபவர்கள்
- உபயோகிக்கப்படும் வசிப்பிட அலகுகள் அல்லது வாடகைக்கு விடுவதற்காக உத்தேசிக்கப்படும் அலகுகள்

**நுண்ணுர்வுசார்ந்த ஆய்வுகள் என்றால் என்ன?**

அமலாக்கத்துறையும் நகரின் மற்ற துறைகளும் இணைந்து நகருக்குள் செயல்படும் அனைத்து வாடகைக் கட்டிட அலகுகளையும் மதிப்பாய்வு செய்து, பாதுகாப்பற்ற அல்லது தற்போதுள்ள முனிசிபல் துணைச் சட்டங்களுக்கு முரணாக இயங்கும் அலகுகளை ஆய்வு செய்வது எப்போது பொருத்தமானது எனத் தீர்மானிப்பார்கள்.

**வாகன நிறுத்தம்**

பிராம்ப்டன் நகர நிர்வாகம் நகரின் சாலை/தெருக்களில் வாகனம் நிறுத்தும் அனுமதியை வழங்குவதில்லை

கீழ்க்கண்டவாறு வாகனம் நிறுத்த அனுமதியில்லை:

- எந்த ஒரு சாலை/தெருவிலும் விடிகாலை 2 மணி முதல் அதிகாலை 6 மணி வரை
- எந்த ஒரு சாலை/தெருவிலும் 3 மணி நேரத்துக்கும் அதிகமாக
- எந்த ஒரு குடியிருப்பு சாலை/தெருவிலும் உங்களுடைய வாகனமானது, அதன் இணைப்புக்கள் மற்றும் டிரெய்லருடன் சேர்ந்து 2.6 மீ உயரத்துக்கும் அதிகமாக மற்றும்/அல்லது 6.7 மீ நீளத்துக்கும் அதிகமாக இருந்தால்

வாகனம் நிறுத்துவதில் நிகழ்த்தும் குற்றங்களின் பட்டியலை இங்கு பார்க்கலாம்:
**brampton.ca**/EN/residents/Parking

**குப்பைகூளம் சேகரிப்பது பற்றிய தகவல்கள்**

பீல் பிராந்திய நிர்வாகம், குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகங்களுக்கு கழிவு சேகரிப்புச் சேவையை வழங்குகிறது. சேகரிப்பு பற்றிய தகவல்களுக்கு இங்கு பார்வையிடவும்:
**peelregion.ca**/waste

RRL திட்டம் பற்றிய மேலும் விபரங்களுக்கு மற்றும் படிவங்கள் பெற வருகை தரவும்: **brampton.ca**/rrl

**கேள்விகள் அல்லது கவலைகள் ஏதும் உள்ளனவா?**

அழைக்கவும் **311**